# ஸத் ஸம்ப்ரதாயம்



## शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजम् ।
## प्रसन्नवदनं ध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

**ஶுக்லாம்ப$^{3}$ரத$^{4}$ரம்’ விஷ்ணும்’ ஶஶிவர்ணம்’ சதுர்பு$^{4}$ஜம் |**
**ப்ரஸன்னவத$^{3}$னம்’ த்$^{4}$யாயேத் ஸர்வவிக்$^{4}$னோபஶாந்தயே ||**

வெண்ணிற ஆடை உடுத்தியிருப்பவரை, எங்கும் நிறைந்தவரை, சந்திரனைப் போன்ற நிறமுடையவரை, நான்கு கரங்களுடையவரை, எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் விளங்குபவரை, எல்லா இடையூறுகளும் அகல்வதற்காக ஆழ்ந்து நினைப்பீராக.

## அருள் மொழிகள்

இறைவன் மற்றும் தர்மம் ஆகிய இரண்டையும் நம் ஸித்தாந்தத்திற்குரிய அடிப்படையாகக் கொள்ளாவிடில் பாரதீயர்கள் அல்லது இந்தியர்கள் என்று கூறிக்கொள்வதற்கே நமக்கு அருகதை இல்லை .

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்



## நீதிசதகம்

(மஹாகவி பர்த்ருஹரி)

**वाञ्छा सज्जन संगतौ परगुणे प्रीतिः गुरौ नम्रता**
**विद्यायां व्यसनं स्वयोषिति रतिः लोक अपवादात् भयं ।**
**भक्तिः शूलिनी शक्तिः आत्मदमने संसर्गमुक्तिः खलैः**
**एते येषु वसन्ति निर्मलागुणाः तेभ्यो महद्भ्यो नमः ॥**

**வாஞ்சா ஸஜ்ஜன ஸங்க³தௌ பரகு³ணே ப்ரீதி: கு³ரௌ நம்ரதா**
**வித்³யாயாம்' வ்யஸனம்' ஸ்வயோஷிதி ரதி: லோக அபவாதா³த் ப⁴யம்' |**
**ப⁴க்தி: ஶூலினீ ஶக்தி: ஆத்மத³மனே ஸம்'ஸர்க³முக்தி: க²லை:**
**ஏதே யேஷு வஸந்தி நிர்மலாகு³ணா: தேப்⁴யோ மஹத்³ப்⁴யோ நம: ||**

ஸாதுக்களுடன் கூடுவதில் இச்சை, பிறர் நற்குணங்களில் ப்ரியம், குருவிடம் பணிவு, கல்வி கற்பதில் விடாமுயற்சி, மனைவியிடம் சிற்றின்பம், ஜனங்களின் பழிச்சொல்லுக்கு பயம், பரமேஸ்வரனிடத்தில் பக்தி, தன்னடக்கத்தில் முனைப்பு துஷ்டர்கள் தொடர்பு இல்லாமை, இவ்வாறான நற்குணங்கள் உடைய சிறந்த மகான்களுக்கு நமஸ்காரம்.

(ஸுஜன பத்ததி: (சான்றோர் இயல்பு)

## விதுர நீதி

அரசனாகிய திருதராஷ்டிரன் விராட நகரத்திலிருக்கும் பாண்டவராகளைப் பார்த்து வரும்படி தனது மந்திரியான ஸஞ்ஜயனை அனுப்பினார். ராஜ்யத்தில் பாகம் கேட்டக்கூடாது என்றும் யுத்தம் செய்யக் கூடாது என்றும் யுத்தம் செய்யக்கூடாதென்றும் என் பிள்ளைகளுக்கு மேல் பாண்டவர்களாகிய நீங்கள்தான் அன்பென்றும் சொல்லி அனுப்பித்தார். அதேபோல் அங்கு சென்று அவர்களிடமும் ஸ்ரீ பாகவனான ஸ்ரீ கிருஷ்ணனிடமும் திருதராஷ்டிர மஹாராஜா சொன்ன செய்தியை சொல்லிவிட்டு திரும்பிய ஸஞ்ஜயர், அரசனைப் பார்த்து சரீரசிரமம் இருக்கிறதென்றும், நாளைக்காலையில் ஸபையில் வந்து அவர்கள் கூறியதை சொல்லுகிறேனென்றும், ராஜ்யத்தைக் காட்டிலும் தர்மமும் ஸத்யமும் பெரிதென நினைத்த தர்மபுத்ரரிடம் நீர் சரியாக நடக்கவில்லை என்று கூறி படுக்கச் சென்று விட்டார் .

அதைக் கேட்ட, அரசன் அளவு கடந்த துயரமடைந்து, பாண்டவர்கள் என்ன சொல்லி அனுப்பியிருப்பார்களோ எனக் கவலை கொண்டு அந்த இரவில் அமைதி இழந்து தீர்க்கதர்சியான விதுரரைக் காண விரும்பி, தூதனை அனுப்பி விதுரரை அழைத்து வரச் செய்தார். “வாசலில் விதுரர் வந்துவிட்டார், அழைத்து வரலாமா ?” என அரசனிடம் கேட்டான் தூதன். அரசனும்...

**प्रवेशय महाप्राज्ञं विदुरं दीर्घथर्शिनम् ।**
**अहं हि विदुरस्यास्य नाकल्पो जातु दर्शने ॥**

**ப்ரவேஶய மஹாப்ராஜ்ஞம்' விது³ரம்' தீ³ர்க⁴த²ர்ஶினம் |**
**அஹம்' ஹி விது³ரஸ்யாஸ்ய நாகல்போ ஜாது த³ர்ஶனே ||**



தீர்கதர்சியான விதுரரை உடன் உள்ளே அழைத்துவா. அவரைப் பார்ப்பதில் எனக்கு எப்பொழுதும் சலிப்பதில்லை. எனக் கூறினார் . உடன் தூதன் விதுரரிடம் சென்று…

(தொடரும்…)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

### ஆசார்யர் என்பவர் யார் ?

சரதிந்து விகாஸி மந்தஹாஸாம்
ஸ்புரதிந்தீவரலோசனாபிராமாம் |
அரவிந்த ஸமான ஸுந்தராஸ்யாம்
அரவிந்தாஸன ஸுந்தரீமுபாஸே ||




ஆதிசங்கரபாகவத்பாதாள் ஸநாதன தர்மோத்தாரணம் செய்வதற்காக இந்த பவித்ரமான பாரதத்தில் 1200 ஆண்டுகளுக்கு முன்பாக அவதாரம் செய்தார் என்று எல்லோருக்கும் தெரியும். ஆதிசங்கர பகவத்பாதாளை ஜகத்குரு என்று நாம் சொல்கிறோம். ஜகத்குரு என்று சொன்னால், ஜகத் எல்லாவற்றிற்கும் குருவாக இருந்தவர் என்று அர்த்தம். அந்த "குரு" என்னும் வார்த்தைக்குச் சரியான அர்த்தம் என்ன என்று கேட்டால், யார் நன்றாக சாஸ்திரத்தின் தத்துவத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறாரோ, அவர்தான் குரு. தத்துவம் நன்றாக தெரிந்து கொண்டிருந்தால் தான் சிஷ்யனுடைய ஐயங்களை நீக்க முடியும். சிஷ்யனுடைய சந்தேகங்களை நிவர்த்தி செய்ய முடியாதவன் குருவாக முடியாது. இந்த விஷயத்தை ஆசினோதி, ஆசரயதி, ஆசரத் என்று மூன்று விளக்கங்களைச் சொன்னார்கள்.

(ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ சந்திர சேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்)



ஆசினோதீதி ஆசார்ய: என்றால் சாஸ்திரத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு இருக்கிறார் என்று அர்த்தம். நன்றாக என்றால் ஸம்பிரதாய பூர்வமாக என்று அர்த்தம். “நானும் நிறைய அனுவாத புத்தகங்களையெல்லாம் படித்திருக்கிறேன். எனக்கும் நிறைய தெரியும்” என்று பலபேர் சொல்லுவார்கள். அனுவாத புத்தகங்களைப் படித்து அதிலிருந்து வந்திருக்கிற ஞானத்திற்கும் சம்பிரதாயத்தின்படி குரு உபதேசத்தினால் வந்த ஞானத்திற்கும் அதிக வித்யாஸம் இருக்கும்.அதற்காகத்தான் ஆதிசங்கர பகவத்பாதாள், சம்பிரதாயம் தெரியாதவன், எவ்வளவோ புத்தகங்களைப் படித்ததாகச் சொல்லி வந்தாலும் கூட, அவனை தூரத்தில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னார். அதனாலே, “சாஸ்திரத்தின் தத்துவத்தை நன்றாகத் தெரிந்து கொண்டவர்” என்ற வார்த்தைக்கு “குரு-சிஷ்யன் என்ற சம்பிரதாயம் மூலமாகத் தெரிந்து கொண்டவர்” என்று அர்த்தம்.



இந்த குரு-சிஷ்யன் என்கிற சம்பிரதாயம் அனாதிகாலமாக வந்திருக்கிறது. முதல் குரு பகவான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி, அவர் நாராயணனுக்கு உபதேசம் செய்தார்; ஸ்ரீமந் நாராயணன் பிரம்மாவிற்கு உபதேசம் செய்தார். பிரம்மா வஸிஷ்டருக்கு உபதேசம் செய்தார். வஸிஷ்டர் சக்திக்கு உபதேசம் செய்தார், சக்தி பராசரருக்கு உபதேசம் செய்தார். பராசரர் வேதவியாஸருக்கு உபதேசம் செய்தார் என்றபடி ஒரு குரு-சிஷ்ய பரம்பரை இருந்து வந்தது. இந்த பரம்பரையில் இருக்கின்ற விசேஷம் என்னவென்றால், சிஷ்யனுக்கு குருவின் விஷயத்திலே அசாதாரணமான பக்தியும் குருவிற்கு சிஷ்யன் விஷயத்திலே அசாதாரணமான அன்பும் இருக்கும்.

(ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் (ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

ஆதிசங்கர பகவத்பாதர் ஸாக்ஷாத் பரமசிவ அவதாரம் என்று எல்லோருக்கும் தெரியும். அவரும்கூட கோவிந்தபகவத்பாதர் சன்னிதியை அடைந்து அவரிடம் பயின்று, வேதாந்த தத்துவ ஞானத்தைப் பெற்றார் என்கிறது சங்கர திக்விஜயம். சிலருக்கு ஒரு கேள்வி ! “ஆதிசங்கரர் பகவான் பரமேஸ்வரனின் அவதாரம் என்கிறீர்களே, அவருக்கும் குருவிடம் போகவேண்டி இருந்ததா ? அவர் தெரியாமல் போனாரா ? தெரிந்தே போனாரா? அல்லது , அவர் கோவிந்தபகவத்பாதரை பரீக்ஷீக்கப் போனாரா?”



அவர் கோவிந்தபகவத்பாதரை பரீக்ஷிப்பதற்காகப் போகவில்லை. ரொம்ப விநயத்துடன்தான் போனார். அப்போது, தெரியாமல் போனாரா தெரிந்தே போனாரா என்று கேட்டால், “தெரியுமோ தெரியாதோ, குருவிடமிருந்து வந்தால்தான் எதற்குமே ஒரு மதிப்பு” என்கிற ஒரு மனோபாவத்துடன் அவர் சென்றார் என்றுதான் சொல்ல வேண்டும். இராமர் வஸிஷ்டரின் சன்னிதியில் தத்துவத்தை கிரஹித்துக் கொண்டார் என்று வஸிஷ்ட இராமாயணம் சொல்கிறது. இராமர் ஸாக்ஷாத் பரமகாத்மாவின்,அவதாரம் அல்லவா? அவருக்கு வஸிஷ்டர் சொல்லவேண்டி இருந்ததா? கிருஷ்ண பரமாத்மா ஸாந்தீபணீ மஹரிஷியிடமிருந்து வித்தைகளைக் கிரஹித்துக் கொண்டார் என்று பாகவதம் சொல்கிறது. அது ஒரு சம்பிரதாயம்.

(தொடரும்….)

## புருஷ ஸூக்தம்

**(ரிக்வேதம், 10.8.90)**

**விளக்கம் மட்டும் இங்கு பார்க்கப்படும்**

வேத மந்திரங்களுள் மிகவும் முக்கியமான ஒன்று “புருஷ ஸூக்தம்”. புருஷன் என்றால் இறைவன். அந்த இறைவனின் மகிமையைப் பாடுகின்ற ஒரு உன்னத ஸூக்தம் இந்த புருஷ ஸூக்தம். கோயிலில், வீட்டில், தினசரி பாராயணத்தில், வைதீக சடங்குகளில், தெய்வ வழிபாட்டில், அன்றாட காரியங்களிலும் இந்த புருஷ ஸூக்தம் நம் வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே உள்ளது.

வேதங்களை மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிப்பார்கள் —

1) சம்ஹிதை : பல்வேறு தேவர்களிடம் பிரார்த்தனைகள்.
2) பிராம்மணன் : யாக விவரங்கள்
3) ஆரண்யகம் : அறுதி உண்மையைப் பற்றிய ஆராய்ச்சி

புருஷ ஸூக்தத்தில் இந்த மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியது என்பது பிரபலம் . இந்த ஸூக்தம் இறைவனின் மகிமையைப் பாடுவதில் ஆரம்பித்து , இறைவனின் தியாகத்தால் இந்த உலகமும் உயிர்களும் தோன்றியதைப் பேசுகிறது. அஞ்ஞான இருளைக் கிடைப்பதற்கான வழி இறைவனை அடைவது தான் என்பதைக் கூறி , அதற்கான காரணத்தையும் அந்த வழியையும் விளக்குகிறது. இதனால் இந்த புருஷ ஸூக்தம் ஒரு முழுமையான சாஸ்திரமாக உள்ளது.

1. இறைவன் ஆயிரக்கணக்கான தலைகள் உடையவர், ஆயிரக்கணக்கான கண்களை உடையவர், ஆயிரக்கணக்கான பாதங்களை உடையவர். அவர் பூமியை எங்கும் வியாபித்து, பத்து அங்குலம் ஓங்கி நிற்கிறார்.



2. முன்பு எது இருந்ததோ, எது இனி வரப் போகிறதோ, இப்பொழுது எது காணப்படுகிறதோ எல்லாம் இறைவனே, மரணமிலா பெருநிலைக்குத் தலைவராக இருப்பவரும் அவரே. ஏனெனில், அவர் இந்த ஜடவுலகைக் கடந்தவர்.


3. இங்கு காணப்படுவதெல்லாம் இறைவனின் மகிமையே. ஆனால் அந்த இறைவன் இவற்றைவிடச் சிறப்பு மிக்கவர். தோன்றியவை எல்லாம் அவருடைய கால் பங்கு தான். அவரது முக்கால் பாகம் இன்னும் வெளி வரவில்லை.

4. பரம்பொருளின் வெளிவராத அந்த பங்கு மேலே விளங்குகிறது. எஞ்சிய கால் பங்கு மீண்டும் இந்தப் பிரபஞ்சமாகத் தோன்றியது. பிறகு அவர் உயிர்கள் மற்றும் ஜடப்பொருட்களில் எல்லாம் ஊடுருவிப் பரந்தார்
(தொடரும்…)

## என்றும் புதியவர்
### ஜகத்குரு சங்கராசார்யார் ஶ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

**முன்னுரை**

கடுவனிள வெயினனார் என்ற புலவர் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலில் திருமாலைப் பாட முற்படும் போது இப்படிக் கூறுகிறார்



ஐந்திருள் அறநீக்கி நான்கினுள் துடைத்துத்தம்
ஒன்றாற்றுப் படுத்தநின் ஆர்வலர் தொழுதேத்தி
நின்புகழ் விரித்தனர் கிழக்குங்கால் அவைநினக்
கிறும்பூ தன்மைநற் கரிந்தே மாயினும்
நகுதலுந் தகுதியீங் கூங்குநிற் கிளப்ப …

(செவி முதலிய ஐம்புலன்களால் உண்டாகும் மயக்க இருளை நீக்கி மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்ற நான்கு குணங்களினால் மனதில் உள்ள மாசைத் துடைத்து ஸமாதி என்ற ஒரு நெறியில் தம் மனதைச் செலுத்திய உன் அன்பர்கள் , உன்னைத் தொழுதேத்தி உன் புகழை விரித்துக் கூறினார். அப்புகழெல்லாம் உனக்கு இயல்பே; வியக்கத்தக்கது அல்ல. இதை நாங்கள் அறிந்திருந்தாலும் அத்தன்மை இல்லாத நாங்கள் அதில் சிலவற்றை அங்குமிங்குமாகப் பிறழக் கூறுகிறோம். அதைக் கண்டு நீ நகைத்தலும்



எங்களுக்கு ஒரு தகுதியே, அதனால் நாங்கள் உன் புகழைக் கூறாமல் இருக்கப் போவதில்லை)

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடத்தின் 35வது பீடாதிபதிகளாக விளங்கிய ஆசார்யாள் ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் மேன்மையை நாம் பேச முற்படுவதும் இவ்வாறே, ஆசார்யாளின் வரலாறு, அவருடைய மேன்மை முதலியன குறித்துப் பல நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் 2017ம் ஆண்டு ஆசார்யாளின் நூறாவது ஜயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு 'The Multifaceted Jivanmukta' என்ற அறிய பெருநூல் ஒன்றை சிருங்கேரி சாராதா பீடத்தின் தற்போதைய ஜகத்குருவான மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் வெளியிட்டார் . அவ்வாறிருக்கையில், நாம் இன்னும் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது என்ற கேள்வி எழுவது இயல்பே, இதற்கு விடையாகப் பல காரணங்கள் கூறலாம். இரண்டை மட்டும் சொல்வோம்.

(தொடரும் …) மிக்க நன்றி : Centre for Brahmavidya

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

**அத்தியாயம் 1**
**நல் வாழ்க்கை**



Jagadguru Sri Abhinava Vidyatirtha Mahaswamigal and Jagadguru Sri Bharati Tirtha Mahaswamigal with Sri Jnanananda Bharati (purvashrama name : Sri Krishna Swami Aiyar) who was an ardent follower of Sringeri Mutt. He wrote many articles, experiences and life history of Jagadguru Sri Chandrashekhara Bharati Mahaswamigal, without which we would not have known much of this great Jivanmukta.
– Posted by N Jambunathan Iyer, Chennai Tamil Nadu India

நாம் உலகத்தின் மத்தியில் பிறந்து உலகத்தின் மத்தியிலேயே வாழ்க்கை நடத்த வேண்டியிருப்பதால் உலகத்திலுள்ள மற்ற ஜீவர்களுடன் சம்பந்தப்படாமலிருக்க முடியாது. ஆனால், அந்த சம்பந்தத்தினால் நமக்கு பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் ஏற்படுகிறது. அப்பொறுப்பை சரியானபடி வஹித்து மற்ற ஜீவர்களுடன் ஒத்து வாழ்வதற்கு என்ன வழியென்று ஆலோசித்து அவ்வழியைக் கைப்பற்றினால்தான் சிரமமன்னியில் வாழ்க்கை நடக்கும். இவ்விதம் ஆலோசனை ஜனங்கள் சிருஷ்டியான காலத்திலேயே எற்பட்டிருக்குமாதலால் இது விஷயமாய் நம் முன்னோர்கள் ஒரு விதமாகத் தீர்மானித்திருக்கிறார்கள் .

ஜனங்கள் பொதுவாகவே என்ன செய்து கொண்டிருக்கிறார்களென்று கவனித்துப் பார்த்தால் ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பார்கள் அல்லது அந்த வேலையால் ஏற்படும் பலனை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். அந்த வேலை நல்லது, கெட்டது என்று இரு வகைப்படும்



, இதையே புண்ணியம், பாபம் என்பார்கள் . அந்தப் பலனும் இரு வகைப்படும் , நல்லதாகிய புண்ணியத்தினால் ஏற்படும் பலன் நல்லதென்கிற சுகமாகும், கெட்டதாகிய பாபத்தினால் ஏற்படும் பலன் கெட்டதென்கிற துக்கமாகும். ஆக, மொத்தமாக ஜனங்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம் .

i) ஸுகத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் .
ii) துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் .
iii) புண்ணியத்தை செய்து கொண்டிருப்பவர்கள்.
iv) பாபத்தை செய்து கொண்டிருப்பவர்கள்.

இவர்கள் சம்பந்தமாய் எப்படி நடந்து கொண்டால் மனச் சாந்தியுடன் வாழலாமென்று உபதேசிக்கற முறையில் முறையே நான்கு சாதனங்களை பகவான் பதஞ்சலி மஹரிஷி குறிப்பிட்டிருக்கிறார். அவை i) மைத்ரீ, ii) கருணை, iii) முதிதை, iv) உபேக்ஷை என்பன.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

## श्रीगणेशस्तुति



### ஸ்ரீக3ணேஶஸ்துதி

**(ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

गजपुङ्गवमीशसुतं सततं जठर प्रविभासित रत्नचयम् ।
वितताखिलविश्वयशोविततिं चितिलिप्सुरहं समुपैमि गतिम् ॥१॥

க3ஜபுங்க3வமீஶஸுதம்' ஸததம்' ஜட2ர ப்ரவிபா4ஸித ரத்னசயம் |
விததாகி2லவிஶ்வயஶோவிததிம்' சிதிலிப்ஸுரஹம்' ஸமுபைமி க3திம் ||1||

சிறந்த ஆண்யானை. ஈசனின் புதல்வர், வயிற்றின் மீது ரத்ன மாலைகள் பூண்டவர், உலகமனைத்திலும் பரவிய புகழ் உள்ளவர். இந்த பகவானை பேரறிவு பெறவிரும்பி எப்போதும் சரணடைகிறேன்.

दीना मत्तान्धनिकान् किमिति व्रजताश्रयध्वमङ्थ्रिं मे ।
कमलोत्पादनदक्षं बोधयतीत्थं सभाधिनाथोऽयम् ॥२॥



தீ³னா மத்தாந்த⁴னிகான் கிமிதி வ்ரஜதாஶ்ரயத்⁴வமங்த்²ரிம்’ மே |
கமலோத்பாத³னத³க்ஷம்’ போ³த⁴யதீத்த²ம்’ ஸபா⁴தி⁴நாதோ²(அ)யம் ||2||

எளியவர்களே ! திமிர் பிடித்த தனிகரை ஏன் அணுகுகிறீர்கள். லக்ஷ்மீயை உற்பத்தி செய்யவல்ல என் சரணத்தை அடைவீர் என இந்த ஸபாநாதரான கணபதி அறிவுறுத்துகிறார்.

कमलं तार्क्ष्यं सर्पं निकटे धत्से किमर्थमीशसुत ।ஈசனின்
आसनवाहनभूषणदानार्थं ज्ञातमङ्घ्रिनम्राणाम् ॥३॥
கமலம்’ தார்க்ஷ்யம்’ ஸர்பம்’ நிகடே த⁴த்ஸே கிமர்த²மீஶஸுத |
ஆஸனவாஹனபூ⁴ஷணதா³னார்த²ம்’ ஜ்ஞாதமங்த்²ரினம்ராணாம் ||3||

ஈசனின் புதல்வரே ! தாமரையையும், கருடனையும் நாகத்தையும் ஏன் அருகில் வைத்துள்ளீர் ? தன் திருவடி வணங்குபவரை (பிரம்மாவாக்கி) ஆஸனமாக (தாமரையையும்) (விஷ்ணுவாக்கி) வாஹனமாக (கருடனையும்) (சிவனாக்கி) ஆபரணமாக (நாகத்தையும்) தருவதற்கல்லவா ? புரிகிறது.

# ஶ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

**(ஶ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)**

### அத்தியாயம் 1

**(கலியுகத்தில் மக்களின் தாழ்நிலை; இராமாயண பாராயணத்தால் ஏற்படும் பலன்கள் மற்றும் இராமாயணம் கேட்பதற்கு உகந்த காலம்)**

அனைத்துலகங்களுக்கும் புகலிடம் இராமன். இராமனைத் தவிர வேறு யார் நமக்கு அடைக்கலம் கொடுக்கமுடியும் ? கலி என்கிற யுகதோஷத்தினால் ஏற்படும் பாவங்கள் ராமனால் அழிக்கப்படுகின்றன. இராமனுக்கு நமஸ்காரம் செய்வது நமது கடமை; காலன் என்னும் பயங்கரமான சர்ப்பம், இராமனால் அதாவது ராம நாம சப்தத்தைக் கேட்டாலே நடுநங்குகிறது. உலகம் முழுவதும் இராமனுடைய பிடியில் இருக்கிறது; இராமனிடம் குறைவுபடாத பக்தி எனக்கு உண்டாவதாகுக. இராமா ! தாங்கள்தான் எனக்கு ஆதாரம். தங்களுக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம். சித்திரகூடத்தில் வசிப்பவர்; திருமகள் வடிவினளாகிய சீதாப்பிராட்டியின் ஆனந்தத்திற்கு இருப்பிடம்; அடியார்களுக்கு அபயம் அளிப்பவர் அவரே. இப்படிப்பட்ட பரமானந்தமூர்த்தியான ஶ்ரீ ராமப்பிரபுவை வணங்குகிறேன்.



(ஜகத்குரு சங்கராசார்யர் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ மஹாஸந்நிதானம் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ பாரதீ தீர்த்த



மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்)

உலகங்களைப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களைச் செய்யும் பிரம்மா, விஷ்ணு, மகேசன் ஆகியவர்கள், எந்தப் பரம்பொருளின் கூறுகளோ, அந்த மிகத் தூய்மையான, சச்சிதானந்த மயமான , பரமாத்மப் பரம்பொருளை வணங்குகிறேன் .

முனிவர்கள் கேட்கிறார்கள் : - ஸூத மாமுனியே ! பேரறிவாளரான தாங்கள், எங்களால் கேட்கப்பட்ட எல்லாவற்றையும் முற்றிலுமாகக் கூறிவிட்டீர்கள். ஆனால், இன்னும் ஒரு சந்தேகம் இருக்கிறது. உலக வாழ்க்கையாகிய வலையில் மாட்டிக் கொண்டவர்களுக்கு துன்பங்கள் ஏராளமாக ஏற்படுகின்றன. கலியில், வேதநெறிப்படியான ஆசார-அனுஷ்டானங்கள் அழிந்து போய்விடுகின்றன என்று தாங்கள் சொன்னீர்கள். சம்சாரமாகிற முடிச்சை வெட்டித் தள்ளுபவராக யார் நினைக்கப்படுகிறார் ?

கொடுமையான கலியுகம் பிறந்ததும் வேதநெறிகள் மறைந்து போகும், அதனால் தருமம் பிறழ்ந்த வாழ்க்கை முறையில் முழுவேகத்துடன் ஈடுபடும் மக்களுக்கு பெருந்துன்பங்கள் ஏற்படும் என்றும் கூறினீர்கள். அப்போது, வேத விதிகளுக்கு எதிரான கருத்துக்கள் தோன்றும் என்று எல்லா அறிஞர்களாலும் கூறப்பட்டிருக்கிறது. கலியுகத்தில், மக்கள் எல்லோரும் காமம் மிகுந்தவர்களாகவும், குட்டையான சரீரம் உடையவர்களாகவும், கருமிகளாகவும், தெய்வத்தின்மேல் நம்பிக்கை வைக்காமல் ஒருவரையொருவர் அண்டியவர்களாகவும் , ஆயுள் குறைந்தவர்களாகவும், அநேக மாவுகளைப் பெற்றுக் கொள்பவர்களாகவும் இருக்கப் போகிறார்கள்.

பெண்கள், தம் சுகத்தையே நாடுபவர்களாகவும் , பிற ஆண்களிடம் விருப்பம் உடையவர்களாகவும் , கணவனின் சொல்லை மதிக்காமல் எப்பொழுதும் பிறர் வீடுகளில் இருப்பதில் ஆசை கொண்டவர்களாகவும், ஒழுக்கம் இல்லாத ஆண்களிடம் எப்போதும் அன்புடையவர்களாகவும் இருக்கப் போகிறார்கள். நற்குடியில் பிறந்த பெண்கள்கூட, அந்நிய புருஷர்களுடன் தரக்குறைவான உரையாடலில் ஈடுபடுவார்கள். கடுமையான சொற்களைப் பேசுபவர்களாகவும், பொய் உரைப்பவர்களாகவும், உடல் தூய்மை விதிகளைக் கடைப்பிடிக்காதவர்களாகவும் இருப்பார்கள்.

கலியுகத்தில் பெண்கள், பொருளில்லாமல் நீண்ட நேரம் பேசுபவர்களாக இருக்கப் போகிறார்கள். திருவோட்டில் உணவு பெற்று உண்டு ஊர் ஊராகச் சுற்றித் திரியும் துறவிகளும் உறவு-நட்பு என்ற சிக்கலில் மாட்டிக் கொள்வார்கள். துறவிகள் உணவு-புகழ் என்ற கவலைகளில் ஆழ்ந்து சிஷ்யக் கூட்டங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள். பெண்கள், தம் இரு கைகளாலும் தலையைச் சொறிந்து கொள்வார்கள். வீட்டுத் தலைவர், கணவர் ஆகியோரின் சொற்களைத் தம் மனமறிந்தே புறக்கணிப்பார்கள்.

எப்போதும் இருபிறப்பாளர்கள் வேதநெறிக்குப் புறம்பானவர்களுடன் சேர்ந்து கொண்டு மறை ஒழுக்கங்களைக் குறைவாகப் பேசுகிறார்களோ, அப்போது கலி முற்றிவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஞானப் பெருந்தகையே! கொடுமையான கலியுகத்தில்,



பாவச்செயல்களையே செய்யும் மக்களுக்கு உள்ளத்தூய்மை இல்லாமற்போகும். அப்படிப்பட்டவர்கள் முக்தியடைய என்ன வழி ? அறநெறியாளர்களில் தலையாயவரே! எல்லாம் அறிந்தவரே! ஸூத மாமுனிவரே! தேவர்களுக்கெல்லாம் தலைவன், தேவதேவன், ஜகத்குரு என்றெல்லாம் போற்றப்படும் பரம்பொருள் இராமன் எந்தக் கர்மாவினால் மனம் மகிழுமோ, அந்த நெறியை கடைப்பிடிப்பதற்கான வழியை எங்களுக்குக் கூறுங்கள்.

முனிவர்களில் தலைசிறந்த ஸூதரே ! இப்போது நாங்கள் கேட்ட விஷயங்களுக்கெல்லாம் முழுமையாகப் பதில் சொல்லுங்கள். ஸூத முனிவரே! தங்கள் சொல்லமுதத்தைக் கேட்பதில் யாருக்குத்தான் மனநிறைவு ஏற்படாது ? (எல்லோருக்கும் ஆனந்தம் உண்டாகும்)

தொடரும் .....

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்